நாள். 7.5.18
எஸ்டிசி.1/18
அ.சா. 1, பிச்சையம்மாள்
முதல் விசாரணை

நான் பாலாத்துபட்டியில் வசிக்கிறேன். ஆஜா் எதிரிகளை தெரியும். சுமார் 6,7 மாதங்களுக்கு முன்பு இரவு 8.30மணியளவில் தெருவில் எதிரிகள் வீட்டருகே உள்ள பொதுபைப்பில் தண்ணீா் பிடிக்க நான் போயிருந்தபோது ஆஜா் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி கட்டானில் அடித்தார்கள். எனக்கு காலிலும், கைகளிலும் காயம் ஏற்பட்டது. மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு என் கணவர் அழைத்துச்சென்றார். போலிசார் அங்கு வந்து விசாரித்து புகார் வாங்கினார்கள். அந்த புகார் அ.சாஆ.1ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி
வாய்ப்பு வழங்கப்பட்ட கு.வி செய்யவில்லை.

WEB COPY

நாள். 7.5.18
எஸ்டிசி.1/18
அ.சா. 2, செல்வராஜ்
முதல் விசாரணை

நான் பாலாத்துபட்டியில் வசிக்கிறேன். அ.சா.1 என் மனைவி. ஆஜா் எதிரிகளை தெரியும். 6,7 மாதத்திற்கு முன்பு இரவு 8.30 மணியளவில் என் மனைவி பொதுக்குழாயில் தண்ணீா் பிடித்தார். அப்போது எதிரிகள் மூவரும் தண்ணீா் பிடிக்க கூடாது என்று சொல்லி மூவரும் கட்டையால் அடித்து மானபங்கப்படுத்தினாா்கள். நான் வேலை முடித்துவரும்போது சத்தம் கேட்டு போய் பாா்த்து என் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலிசாா் என்னை விசாரித்தாா்கள்.

கு.வி

வாய்ப்பு வழங்கப்பட்ட கு.வி செய்யவில்லை.

WEB COPY